සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான**
**முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (II)**

காலம் - 03 மணித்தியாலங்கள்

## சட்டமும் முகாமையும் (07)

විභාග අංකය
Index No / சுட்டெண் ....................................

- **ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் ஆகக்குறைந்தது 2 வினாக்களை தேர்ந்தெடுத்து ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் பதிலளிக்கவும்.**
- **எல்லா வினாக்களுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.**

---

### *பகுதி I - (சட்டம்)*

1. இலங்கையின் அரசியலமைப்பின் அத்தியாயம் - III இல் 10 தொடக்கம் 14 வரையிலான உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை விவரிக்குக. (20 புள்ளிகள்)

2. இலங்கைச் சட்டத்தின் தோற்றுவாய்களைக் குறிப்பிட்டு ஒரு தோற்றுவாயை விளக்குக. (20 புள்ளிகள்)

3. i பிரபல உள்ளூர் மருந்து நிறுவனம் ஒன்று முன்னணி வார இறுதி நாளிதழில் அறிவித்தல் ஒன்றை பிரசுரம்செய்து, தமது நிறுவனம் தயாரிக்கும் எண்ணெயை தடவினால் ஒரு வாரத்தில் முடி உதிர்வது தடுக்கப்படும் என்று விளம்பரம் செய்தது. முடி உதிர்ந்தால், அதற்கு ஒரு மில்லியன் ரூபாய் வழங்க நிறுவனம் தயாராக உள்ளதாகவும் அதனை உறுதிப்படுத்த, நிறுவனம் ஏற்கனவே ரூ. 10 லட்சம் நிதி வைப்பொன்றில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்தது..

   இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணெயை கமலா தனது தலைமுடியில் தடவியிருந்தும் ஒரு வாரத்தில் முடி உதிர்வது நிற்கவில்லை, எனவே சம்பந்தப்பட்ட நிறுவனம் வாக்குறுதி அளித்த இழப்பீட்டை வழங்குமாறு கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந்தார். இதற்கு பதிலளிக்கும் போது நிறுவனம், இது வெறும் விளம்பர வாசகம் மட்டுமே என்று கூறியது.

   நீதிமன்றத்தின் நிலைப்பாடு எவ்வாறாக இருக்கும்? விவரிக்குக. (10 புள்ளிகள்)

   ii ஒப்பந்தச் சட்டத்தின் கீழ், எந்தவொரு நபருக்கும் வலிதான ஒப்பந்தத்தில் ஈடுபடும் திறன் உள்ளது. இருப்பினும், வலிதான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான மட்டுப்பாடுகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்தின் முன் வலிதான ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கான சட்டரீதியான தடைகள் அல்லது மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பில் குறைந்தபட்சம் இரண்டு (02) உதாரணங்கள் மூலம் விளக்குக. (10 புள்ளிகள்)

4. பின்வரும் தலைப்புக்களில் நான்கு (04) தொடர்பாக சிறுகுறிப்பு எழுதுக.

i. ஒப்பந்த சட்டத்தில் முனைவு (Offer)

ii. பெறுமதியான பிரதிபயன் (Intention or Due Consideration)

iii. ஏற்பு (Acceptance)

iv. சட்டவிரோத ஒப்பந்தம்

v. உரோமன் டச்சுச் சட்டம்

vi. மனித உரிமைகள் ஆணைக்குழு (புள்ளிகள் 5X4 = 20)

**பகுதி II - (முகாமைத்துவம்)**

5. முகாமையாளர்களின் வகிபாகங்கள் தொடர்பான Henry Mintzberg இன் வகைப்படுத்தலில் மூன்றினை 3 இனை பெயரிடுக. அவற்றில் இரண்டு பற்றி உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

6. பின்வரும் முகாமைத்துவ செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

i. நிர்வகித்தல்

ii. தலைமைத்துவம் வகித்தல்

iii. திட்டமிடல்

iv. ஒழுங்கமைத்தல் (புள்ளிகள் 5X4 = 20)

7. அ) ஒரு நிறுவனமொன்று ஒரு நிறுவன ஒழுங்கமைப்பு (Organizational Structure) கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ) உங்களுக்குத் தெரிந்த அரச நிறுவனமொன்றின் நிறுவனக் ஒழுங்கமைப்பு (Organizational Structure) வரைபடத்தைக் முன்வைக்குக. (10 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 20)

8. ஒரு நிறுவனமொன்றைக் கட்டுப்படுத்த, முகாமையாளர்கள் நிதி மற்றும் நிதி அல்லாத கட்டுப்பாட்டு முறைகளைப் (Financial and Non-Financial Controlling Methods) பயன்படுத்துகின்றனர். மேற்கூறிய இரண்டு (02) முறைகள் பற்றி உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளிகள்)

*************